சாராம்சம்

International Labour Organization

100
1919-2019



# இலங்கையில் தொழில்களின் எதிர்காலம்

## தொழில்நுட்ப மாற்றங்களினூடாக ஒரு ஒளிமயமான எதிர்காலத்தினை வடிவமைத்தல்

# Future of Work in Sri Lanka

## Shaping technology transitions for a brighter future

# இலங்கையில் தொழில்களின் எதிர்காலம்

தொழில்நுட்ப மாற்றங்களினூடாக ஒரு ஒளிமயமான எதிர்காலத்தினை வடிவமைத்தல்

Copyright © International Labour Organization 2019
First published (2019)

Publications of the International Labour Office enjoy copyright under Protocol 2 of the Universal Copyright Convention. Nevertheless, short excerpts from them may be reproduced without authorization, on condition that the source is indicated. For rights of reproduction or translation, application should be made to ILO Publications (Rights and Licensing), International Labour Office, CH-1211 Geneva 22, Switzerland, or by email: rights@ilo.org. The International Labour Office welcomes such applications.

Libraries, institutions and other users registered with a reproduction rights organization may make copies in accordance with the licences issued to them for this purpose. Visit www.ifrro.org to find the reproduction rights organization in your country.

---

Future of Work in Sri Lanka: Shaping technology transitions for a brighter future

ISBN: 978-92-2-132995-4 (print) 978-92-2-132996-1 (web pdf)

International Labour Office: ILO Country Office for Sri Lanka and the Maldives

This publication was written by Vikrom Mathur, Urvashi Aneja, Ira Anjali Anwar, Aishwarya Shridhar and Natalia Sanchez of TANDEM Research, for ILO Country Office for Sri Lanka and the Maldives.

---

The designations employed in ILO publications, which are in conformity with United Nations practice, and the presentation of material therein do not imply the expression of any opinion whatsoever on the part of the International Labour Office concerning the legal status of any country, area or territory or of its authorities, or concerning the delimitation of its frontiers.

The responsibility for opinions expressed in signed articles, studies and other contributions rests solely with their authors, and publication does not constitute an endorsement by the International Labour Office of the opinions expressed in them.

Reference to names of firms and commercial products and processes does not imply their endorsement by the International Labour Office, and any failure to mention a particular firm, commercial product or process is not a sign of disapproval.

Information on ILO publications and digital products can be found at: www.ilo.org/publns.

---

Report Design: Harshyla Singh
Illustrations: Saket Ghaisas
Cover Art Design: Asitha Seneviratne

Printed in Sri Lanka

# சாராம்சம்

## தளத்தை அமைத்தல்

தொழில் உலகம் மிகப்பெரிய மாற்றத்திற்கு உள்ளாகி வருகின்றது. தொழில்நுட்ப மேம்பாடுகள், குடிசன கட்டமைப்புசார் மாற்றங்கள், மாறிவரும் அரசியல் கலாசாரங்கள் தொழில் மற்றும் உற்பத்தியின் மாற்றமடையும் வடிவங்கள் போன்ற பல சிக்கலான இயக்கிகளின் ஒருங்கிணைப்புடன் ஏனைய இயக்கிகளுக்கு மத்தியில் மக்களின் வேலை மற்றும் வாழ்க்கை முறையில் முன் நிகழ்ந்திராத மாற்றங்களை உருவாக்கி வருகிறது. தொழில் உலகில் ஏனைய காரணிகளுக்கு மத்தியில் செயற்கை நுண்ணறிவு, அறிவார்ந்த தன்னியக்கம் மற்றும் ரொபோடிக்ஸ் போன்ற டிஜிட்டல் இயக்கப்பாட்டுத் தொழில்நுட்பங்களின் கொத்துக்களை குறிக்கும் நான்காவது தொழிற்துறை புரட்சியின் தாக்கம் மீது மிகவும் அறிவார்ந்த கவனமும், பொதுக் கரிசனைகள் மீதும் கவனம் செலுத்துவதாக அமைந்துள்ளது. நம்பிக்கை மற்றும் நம்பிக்கையீனம் ஆகியவற்றுக்கிடையிலான உலகளாவிய அலைவு விளக்கங்களின் போது தெற்கு உலகு முழுவதும் மாறுபட்ட சமூக பொருளாதார சூழல்களின் வெளிச்சத்தில் மீளாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். தெற்குலகின் பெரும்பாலான நாடுகளில் தொழிற்துறை புரட்சிகள் இன்னமும் விரிவடைந்து சென்று கொண்டிருக்கின்றன. தொழில்நுட்ப போக்குகள் மற்றும் உலகப் பணி மீதான அதன் தாக்கம் ஆகியன உள்நாட்டு மட்டத்தில் அரசியல் மற்றும் சமூக இடையீடுகள் மூலமாக சீராக்கப்படவுள்ளன. தெற்குலகின் எதிர்காலப் பணியில் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களின் தாக்கம் தொடர்பில் தற்போது சிறியளவிலான கலந்துரையாடல்கள் அல்லது சான்றுகளே காணப்படுகின்றன. இவ்வாய்வானது அந்த இடைவெளியை பூர்த்தி செய்வதற்கு முயற்சிக்கிறது.

நான்காவது தொழிற்துறை புரட்சியுடன் கூட்டிணைந்து வளர்ந்துவரும் தொழில்நுட்பங்கள் இலங்கையின் எதிர்காலத் தொழில் உலகில் எவ்வகையான தாக்கத்தை உண்டாக்கும்? யார் வெற்றி பெறுவார்கள், யார் தோல்வியடைவார்கள், அரசாங்கங்கள், தொழிற்துறைகள் மற்றும் நாட்டுப் பிரஜைகள் எமக்கு முன்னால் இடம்பெறவிருக்கும் இந்த மாற்றத்துக்காக எவ்வாறு தயாராக வேண்டும்?. குறிப்பாக, நாம் மூன்று விடயங்கள் குறித்து கவனம் செலுத்துகிறோம்: தன்னியக்கலும் தொழில் இடப்பெயர்வும், தொழில் நிலைமைகள் மற்றும் தொழிற் சந்தையில் சமத்துவமின்மை போன்றவையாகும்.

தொழில் உலகு மீதான தொழில்நுட்பத்தின் சாத்தியமான தாக்கம் குறித்த கண்டுபிடிப்புகள் 'முன்மொழிவுகள்' எனும் வடிவில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. கிடைக்கப்பெற்ற எழுத்தாவணங்கள், பங்குதாரர்களுடன் மேற்கொண்ட கொள்கை ஆய்வுகள் மற்றும் தரவாய்வுகளின் அடிப்படையில் இந்த முன்மொழிவுகள் ஊடாக அடுத்துவரும் பத்து முதல் பதினைந்து ஆண்டுகளில் இலங்கையில் எதிர்பார்க்கப்பட்டுள்ள மாற்றங்கள் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளன.

## தன்னியக்கம் மற்றும் தொழில் இடப்பெயர்வு

வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் மற்றும் தன்னியக்கம் குறித்த பெரும்பாலான விவாதங்கள் முன்னெப்போதும் இல்லாத வகையில் தொழில் இழப்பின் எதிர்பார்ப்புகளை மையப்படுத்தியே அமைந்துள்ளது. குறிப்பிட்டதொரு பிரிவில் தன்னியக்கத்தின் பின்பற்றல் மற்றும் தொழில் மீதான தாக்கம் ஆகியன தொழில்நுட்ப சாத்தியக்கூறு, செலவு செயல்திறன், பௌதீக, டிஜிட்டல் மற்றும் உட்கட்டுமானம் ஆகியவற்றின் கிடைக்கும் தன்மை போன்ற பல்வேறு காரணிகளில் தங்கியுள்ளது. இலங்கைச் சூழலில் இக்கூறுகள் எவ்வாறு செயற்படுகின்றன என்பது குறித்தும், தொழில் இடமாற்றத்தின் அடுத்துவரும் சாத்தியப்பாடு குறித்தும் புரிந்துகொள்வதற்கான முயற்சியாக பின்வரும் எட்டு முன்மொழிவுகளும் அமைந்துள்ளன.

1. முன்னேற்றகரமான தொழில்நுட்பத்தைப் பின்பற்றுவதானது, விவசாயத்தின் மிகச்சிறந்த வர்த்தகமயமாக்கல் மற்றும் தொழில் தேவைகளின் குறைப்பு ஆகியவற்றுக்கு வழிவகுக்கும்.

விவசாயத்துறையில் உள்ள ஒருங்கிணைப்பு மற்றும் தொழில்நுட்ப பயன்பாடு ஆகியன உலகளாவிய மதிப்புச் சங்கிலியினுள், வர்த்தகமயமாக்கல் வாய்ப்புகள் மற்றும் ஒருங்கிணைப்பு ஆகியவற்றின் மீது பெரும் பங்கு வகிக்கும். இது பரந்துபட்ட இடமாற்றத்துக்கு வழிவகுக்காது, விவசாய தொழிலின் சார்பு நிலையை குறைப்பதாக அமையும். அதிகரித்து வரும் சூழல்சார் சவால்கள் மற்றும் சமூக பொருளாதார பாதிப்பு காரணமாக ஏற்கனவே பெரும்பாலான பணியாளர்கள் விவசாயத்துறையிலிருந்து வெளியேறி விட்டமையே இதற்கு காரணமாக அமைந்துள்ளது. இருப்பினும், கிராமிய தொழிலுக்கான மாற்றுத்தொழில் வாய்ப்புகளுக்கான சாத்தியங்கள் இல்லாமையினால், தொழில் கருதி விவசாயத்தில் தங்கியிருப்போர் மீது தாக்கத்தை ஏற்படுத்துவதுடன், பருவகால தொழில் போக்குகளை பாதிப்படையச் செய்யும்.

2. அதிகரிக்கும் தொழிலாளர் பற்றாக்குறைகள் மற்றும் மாறிவரும் இளைஞர்களின் ஆர்வங்களை ஈடுகொடுப்பதற்காக உற்பத்திச் செயல்முறைகளின் பல்வேறு படிநிலைகளை தன்னியக்கமாக பெருந்தோட்டத்துறை முன்னெடுக்க வேண்டும். மாறிவரும் இளைஞர்களின் ஆர்வங்களும் குறுகிய வாழ்வாதார வாய்ப்புகளும் பெருந்தோட்டத் தொழிற் சரிவினை நோக்கி வழியமைத்துக் கொண்டிருக்கின்றது. தொடர்ச்சியான தொழிலாளர் பற்றாக்குறைகள் இருந்த போதிலும், இலங்கைச் சூழலில் தன்னியக்க தொழில்நுட்பங்களை பின்பற்றுவதில் சவால்கள் காணப்படுகின்றன. மிகையான சிறிய நிறுவனங்கள், உயரமான பெருந்தோட்டங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் புவியியல், சூழலியல் காரணிகளான மேல்மண்ணரிப்பு, மற்றும் தேயிலை பறிக்கும் செயல்முறையிலுள்ள நயம் போன்றவை உள்ளடங்குகின்றன. இந்த செயல்முறைகளில் ஏற்பட்டுள்ள அபிவிருத்திகள் ஒரு வரையறுக்கப்பட்ட இடமாற்றத்தையே வழிவகுக்கும், இருப்பினும் இவை இத்துறையில் ஒட்டுமொத்த தொழில் தாக்கத்தை ஏற்படுத்துவதாக அமையாது.

3. தொழில்நுட்ப பின்பற்றுதலைக் காட்டிலும் கட்டுமானத்துறையில் நிலவும் தொழிலாளர் பற்றாக்குறைகள், அநேகமாக உள்வரும் புலம்பெயர் தொழிலாளர்களினால் சமாளிக்கும் நிலைமை உருவாகும். உலகளாவிய ரீதியில் இத்துறை துரிதமான வளர்ச்சியடைந்து வருகின்ற போதிலும், அதி உயர்தரமிக்க கட்டுமானத் தொழிநுட்பத்துக்கு அதிகளவிலான முதலீடு தேவைப்படுகிறது. இலங்கையில் நிலவும் துறைசார் தொழிலாளர் பற்றாக்குறையை கட்டுமானத் தொழில்நுட்பங்கள் அடையாளப்படுத்திய போதிலும், கட்டுமானத் துறையிலுள்ள தொழில்நுட்ப சாத்தியப்பாடுகள் தொடர்பான குறைந்த விழிப்புணர்வானது, நவீன கட்டுமான முறைகள் முன்னெடுப்பதில் மந்த கதியை ஏற்படுத்தியுள்ளது. வெளிநாடுகளிலிருந்து வருகை தரும் பணியாட்கள் தொடர்பில் முறையான ஒழுங்குபடுத்தல்கள் காணப்படாமை காரணமாக, கட்டுமான நிறுவனங்கள் இந்த வெளிநாட்டு தொழிலாளர்கள் மீது தமது முதலீடுகளை மேற்கொள்வதுடன், தொழில்நுட்பத்தில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு தவறுகின்றன.

4. பெயர்ச்சியியல் வளர்ச்சியானது தொழிலாளர் கேள்வியை அதிகரிக்கும். ஆனாலும், அதிகப்படியான தன்னியக்க பின்பற்றலானது இடமாற்றத்திற்கு வழிவகுக்கும். பெயர்ச்சியியல் என்பது இலங்கையின் தேசிய ஏற்றுமதி மூலோபாயத்தின் கீழுள்ள மிக முக்கியமான துறையாக உள்ளதுடன், வர்த்தகம் மற்றும் வியாபார வளர்ச்சியின் அதன் பங்கினை சிறப்பித்துக்காட்டுகிறது. கேள்வியை அதிகரித்தல் மற்றும் பெயர்ச்சியியல் விஸ்தரிப்பை ஏற்படுத்துவதன் மூலமாக அடுத்துவரும் ஐந்து ஆண்டுகளில் புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்கிக் கொள்ள முடியும். இருப்பினும், மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்கள் மற்றும் புத்திசாலித்தனமான முகாமைத் தீர்வுகள் ஆகியவற்றை பின்பற்றும் போது, நிலையான தொழிலாளருக்கான கேள்விளைகள் குறைவடைவதுடன், மேற்பார்வை மற்றும் முகாமை சார் பதவிகள் போன்ற பல்வேறு மத்திய - திறன்கள் தொழில்களின் இடமாற்றத்தை வழிவகுக்கும்.

5. தொழில்நுட்பம் சார்ந்த இடமாற்றமானது, தகவல் தொழில்நுட்பம், வெளிவாரி வர்த்தக செயல்முறை மற்றும் நிதித் துறைகளில் ஆரம்ப மட்ட மற்றும் நடுத்தர திறனுடைய தொழில்களை ஏற்படுத்தும். வளர்ந்து வரும் விசேட தொழில்களை அணுகுவதற்கு மேம்படுத்தப்பட்ட திறன்கள் மற்றும் வாழ்நாள் கற்றல் ஆகியவற்றில் முதலீடு செய்ய வேண்டிவரும். இலங்கையின் தகவல் தொழில்நுட்ப துறையின் விரிவாக்கமானது பிரதானமாக சர்வதேச சந்தைகளைச் சார்ந்ததாக உள்ளதுடன், தரவு பகுப்பாய்வு

மற்றும் சைபர் பாதுகாப்பைச் சுற்றி உயர் திறனுடைய தொழினுட்ப தொழில்களுக்கான கேள்வியை அதிகரிப்பதற்கான வாய்ப்புள்ளது. மேலும், நடுத்தர அளவிலான மறுபயன்பாட்டு தொழல்களினால் வகைப்படுத்தப்பட்டுள்ள வெளிவாரி வர்த்தக செயல்முறை மற்றும் நிதித்துறைகள் ஆகியவற்றின் தன்னியக்கமானது, இடமாற்றத்திற்கு வழிவகுக்கும். உள்நாட்டு நிறுவனங்களின் தொழில்நுட்ப பின்பற்றலானது, சாத்தியப்பாட்டின் படியும், சனத்தொகையில் உள்ள டிஜிட்டல் திறன்கள் தேவைப்பாடும் திறனுமுள்ள தொழிலாளர்களின் கிடைக்கும் தன்மை மற்றும் உலக பொருளாதாரத்தில் இலங்கையின் ஒருங்கிணைப்பு விஸ்தரிப்பு ஆகியன செல்வாக்கு செலுத்துவதாக அமையும். தொழில்நுட்ப மேம்பாட்டில் இத்துரித மாற்றங்களுக்கு தொழிலின்மைக்கான வாய்ப்புகள் மற்றும் மிகைப்படுத்தப்படுத்தல் அதிகமென்பதால் புதிய திறன்கள் மற்றும் மீள்திறன்கள் போன்றவற்றில் நிலையான முயற்சிகள் தேவைப்படுகின்றன.

6. இலத்திரனியல் வர்த்தகத்தின் வளர்ச்சியானது புதிய சந்தைகள் உருவாக வழிவகுக்கும். ஆனால், பாரம்பரிய சிறு தொழில்கள் இனிமேலும் குறைந்த திறனுடைய இளைஞர்களுக்கான சமூக நகர்வுக்கு வாய்ப்பினை வழங்காது. இலங்கையின் இளம் தலைமுறையினரில் பெரும்பகுதியினர் சிறுதொழில் துறையில் வேலை இழப்புகளின் சுமையை தாங்க வேண்டியேற்படும். குறிப்பாக, விவசாயம் மற்றும் பெருந்தோட்டங்களிலிருந்து வெளியேறியவர்களுக்கு சிறுதொழில் என்பது முறையான தொழிலுக்கான படிக்கல்லாக அமையும். மாறாக, இலத்திரனியல் வர்த்தகத்தின் எழுச்சியானது தொழில்நுட்ப சாத்தியப்பாடுகள் மற்றும் குறைந்த முதலீடுகள் ஊடாக இந்த அபிவிருத்தியுடன் பொருந்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது பல்வேறு பதவி நிலைகளுக்கு குறிப்பாக, இந்த வேலைகளின் தன்னியக்கம் இடர் நிறைந்ததாக இருப்பதாலும், மிகவும் பாதுகாப்பற்ற மற்றும் நிரந்தரமற்றதாக இருப்பதாலும் குறைந்த திறன் மட்டத்தில் தொழிலாளர் கேள்வியை உருவாக்கும்.

7. தொழில்நுட்ப பின்பற்றலானது, உற்பத்தி துறையில் தொழில் முனைவாக்கத்திற்கு வழிவகுக்கும். தொழிற்துறை தன்னியக்கம் மற்றும் செயற்கை நுண்ணறிவு போன்ற வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களின் பயன்பாடானது, இலங்கையின் உற்பத்தி துறையில் ஆரம்ப கட்டத்தில் உள்ளது. ஆனால், தன்னியக்கம் ஊடாக தொழிலாளர் உற்பத்திறனை அதிகரிப்பதன் மூலமாக நீண்டகாலத்திற்கு நிரந்தர உழைப்பாளரின் உழைப்பில் தங்கியிருப்பதை குறைக்கும். அடுத்துவரும் தசாப்தத்தில் நடுத்தர திறனுள்ள தொழில்களில் தன்னியக்கத்தை பெறுவதற்கான வாய்ப்புள்ளது. உணவு பதப்படுத்தல் போன்ற மூலதன மற்றும் தொழில்நுட்ப உள்ளார்ந்த துறைகளில் உயர்மட்ட உடலுழைப்பு செயல்முறையின் தன்னியக்கத்துடன் தொடர்ந்து முன்னெடுக்கப்படும். இருப்பினும், டிஜிட்டலாக்கம் மற்றும் தன்னியக்க பின்தளம் ஆகியவற்றின் காரணமாக ஒழுங்குபடுத்தப்பட்ட உற்பத்தி முழுவதும் நடுத்தர திறன் மட்ட பணிகள் பாரியளவில் பாதிக்கப்படலாம்.

8. உயர்ந்த தன்னியக்க சாத்தியக் கூறுகள் இருந்தபோதிலும், தொழில்நுட்ப இடையூறுகளிலிருந்து பொதுத்துறை பாதுகாக்கப்படும். இலங்கையின் பொதுத்துறையானது அதன் அளவு மற்றும் செல்வாக்கு இரண்டிலுமே விஸ்தீரணமானதாகவுள்ளது. இலக்குள்ள முயற்சிகள் இல்லாததால், தொழில்நுட்ப இடையூறுகளால் இவற்றுக்குப் பாதிப்பு ஏற்படாமல் இருக்கலாம். இலத்திரனியல் ஆட்சி மூலோபாயங்களின் வெற்றியானது அடிப்படையில் முறையான கல்வி, பயிற்சிகள் என்பவற்றுடன் அரசாங்கத்தினுள்ளே மற்றும் வெளியிலிருந்து வரும் தொழில்நுட்பம் மற்றும் அதிகாரப போட்டி தொடரபான மாறும் தன்மை கொண்ட புலக்காட்சி ஆகியவற்றில் தங்கியுள்ளது.

## தொழில் நிலைமைகள்

வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களின் பரவலானது, நிறுவன கட்டமைப்புகள் மற்றும் ஊழியர் முகாமை நடைமுறைகள் ஆகியவற்றை மாற்றியமைக்கிறது. முழு நேர மற்றும் நிரந்தர தொழில் முறையானது பகுதி நேர மற்றும் ஒப்பந்த ரீதியிலான முறைமையை மாற்றுகிறது, மேலும் இவற்றினால் பல தொழில் அனுகூலங்களும் தொழிற் பாதுகாப்பும் கிடைக்கிறது. இலங்கையில் தொழிலின் நிலையான வடிவங்களின் விரிவாக்கமானது, குறிப்பாக உற்பத்தி துறையில் தொழில் வழங்குநர்கள், ஊழியர்கள் மற்றும் வேலைத்தளம் ஆகியவற்றிலிருந்து நெகிழ்வுத்தன்மையுடைய பணிக்கான கேள்வியை

அதிகரிக்கிறது். பணியின் தன்மை மற்றும் கலாசாரம் ஆகியன தொடர்ச்சியாக சீராக்கப்படுவதால் ஸ்தாபிக்கப்பட்ட தொழில் தரங்களை குறைவடையச் செய்வதாக அமையும். மாற்றமடையும் மற்றும் மாறிவரும் இளைஞர்களின் ஆர்வங்கள் மீள் கட்டமைக்கப்பட்டு வேலை நிலைமைக்கேற்றதொரு கம்பீரமான புலக்காட்சியை செய்வதற்கான வாய்ப்புள்ளது.

கீழ்வரும் நான்கு கருத்துக்கள் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் தொழில் நிலைமைகள் குறிப்பாக தொழில் தன்மையை பார்வையிடும் போது வேலைத்தளம், வேலை கலாசாரம், ஊழியர் முகாமை மற்றும் கூட்டு பேரம் பேசும் பொறிமுறைகள் ஆகியவற்றில் மறு கட்டமைப்புக்கான முக்கிய வழிகளாக அமையும்.

1. தொழிலின் நிலையற்ற வடிவங்கள் குறிப்பாக குறைந்த திறனுள்ள தொழில்கள் அதிகரிக்கும். பணியின் 'சாதாரண' தன்மை மற்றும் பணி வடிவங்களின் நிலையற்ற தரம் அதிகரித்து வருகிறது. புதிய தொழில்நுட்பங்களின் அறிமுகத்தோடு உண்மையான நேரத்திலும், தொலைவிலிருந்தும் தமது தொழில் தேவைகளை முகாமை செய்யவும், மறு கட்டமைப்பு செய்யவும் முடியும். இதன் தாக்கமானது, உடல் மற்றும் அறிவாற்றல் இலக்குகள் மீளத் தேவைப்படுவதாகவும், விரிவான மனித தலையீடு தேவையற்றதாகவும் உள்ள குறைந்த திறனுள் பணிகள் கடுமையானதாக உணர்வதற்கான வாய்ப்புள்ளது.

2. தளத்தை (Platform) மையமாகக் கொண்ட தொழில்கள் அதிகரிக்கப்படுவதுடன், பொருத்தமற்ற வழக்கமான தொழிலாளர் பாதுகாப்பு பொறிமுறைகளை வழங்குதல். தொழிலின் தளமானது குறிப்பாக தொழில் வழங்குநர் - ஊழியர் உறவை மீள்கட்டமைத்தலின் போது உட்பிரிவுகளை கொண்டிருக்கும். 'இலவச பொருளாதாரம்' புதிய தொழில் வாய்ப்புகளை பகுதி நேர மற்றும் சாதாரண தொழிலாளர்களுக்கு வழங்குவதுடன், புதிய செயற்திறனற்ற மற்றும் சமத்துவமின்மையை வெளிப்படுத்துவதாக அமையும். தளத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரமானது ஆபத்தான வேலையின் புதிய வடிவங்களை உருவாக்குவதுடன், தொழிலாளியின் வாழ்வாதாரங்கள் மற்றும் உரிமைகள் குறிப்பிட்ட வழிகளில் அழிக்கப்படலாம் என்ற கரிசனை ஏற்பட்டுள்ளது.

3. மனித வள மேலாண்மைக்கான தொழில்நுட்ப பின்பற்றலானது துரிதமாக பணிக் கலாசாரத்தை மாற்றுவதாக அமையலாம். சமூக ஊடகம், புத்திசாலித்தனமான உபபணி வெளியீடுகள், கடுங் கண்காணிப்பு தொழில்நுட்பங்கள், ஒருசில பணியிடங்கள் மற்றும் மனித வள முகாமைத்துவம் போன்ற தொழில்நுட்ப தீர்வுகளின் நடைமுறைப்படுத்தலானது, வெவ்வேறு வழிகளில் தொழில் கலாசாரங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும். உதாரணத்திற்கு, எந்தவொரு இடத்திலிருந்தும் தமது ஊழியர்களை கண்காணிப்பதற்கான அதிகாரத்தை நிறுவனங்களுக்கு தொலைவு கண்காணிப்பு தொழில்நுட்பங்கள் வழங்குகின்றன. இந்த பயன்பாடுகள் இரு வழிகளிலும் மறுமொழிகளை அளிக்கிறது – அமேசொன் போன்ற பெரிய நிறுவனங்கள் அவற்றின் கடுமையான கண்காணிப்பு தொழில்நுட்பங்கள் காரணமாக விமர்சிக்கப்படுகின்றன. மேலும் பெண்கள் போன்றவர்களுக்கு தொலைவிலிருந்தே பணியாற்றுவதற்காக ஏனைய வாய்ப்புகளை திறந்துள்ளதோடு தற்போது அவர்கள் அலுவலகத்திற்கு செல்லாமலேயே பணிகளை மேற்கொள்வதற்கான தெரிவுகளும் காணப்படுகின்றன.

4. தொழிற்சங்க அமைப்புகளின் கூட்டு பேரம் பேசல் மற்றும் பாரம்பரிய வடிவங்கள் ஆகியன நிறுவனங்களினால் கட்டமைக்கப்பட்ட சந்தையமைப்பு மற்றும் தரமற்ற பணியின் பெருக்கம் காரணமாக வலுவிழக்கப்படும். நவீன வேலைச் சூழல்கள், கூட்டு பேரம் பேசல் நடைமுறைகளையும் குறிப்பாக தொழிற்சங்க அமைப்புகளையும் பாதிப்படையச் செய்யும். தரமற்ற வேலைவாய்ப்பு மற்றும் வெளிவாரி பணி ஆகியவற்றின் அதிகரிப்பானது, குறிப்பாக தகவல் தொழில்நுட்பம் மற்றும் வர்த்தக வெளிவாரி செயல்முறையில் (IT & BPO) தொழில் மீதான கூட்டு ஒழுங்கமைப்பினை கடினமாக்கும். வேலையிடம் மற்றும் ஊழியர்களின் பகிர்வு இல்லாதபோது, டிஜிட்டல் மற்றும் சுயவேலை சூழல் முறைமையினுள் ஏனைய தொழிலாளர்களுடன் பிணைப்பினை ஏற்படுத்துவதில் பல சிக்கல்களை தொலைவிலுள்ள தள ஊழியர்கள் சந்திக்க வேண்டிவரும். இதன் காரணமாக, தொலைவு சேகரிப்பின் புதிய வடிவங்களுக்கு டிஜிட்டல் மற்றும் சமூக ஊடகத்தளங்கள் பயன்மிக்கதாக அமையலாம்.

## தொழிலாளர் சந்தை சமநிலையின்மை

தொழிலாளர் நலன்புரி மற்றும் தொழில்நுட்பத்தை அணுகல் ஆகியன சமூக பொருளாதர நிலைமைகள் மற்றும் அநீதிகள் ஆகியவற்றினால் வடிவமைக்கப்படும். தொழில்நுட்பத் தடைகள் மற்றும் டிஜிட்டலாக்கம் ஆகியன களத்தை சமநிலைப்படுத்துவதை நோக்கி செயற்படுவதுடன், ஏற்கனவேயுள்ள சமூக நியாயமற்றதன்மை ஆகியன மீள் உற்பத்திக்கு உள்ளாகலாம் அல்லது மேலும் புதிய தொழில்நுட்பங்களின் பரவலுடன் உறுதிப்படுத்தப்படலாம். சமூக கலாச்சார காரணிகள், பிராந்திய, அரசியல் மற்றும் பொருளாதார வேறுபாடுகள் எவ்வாறு தொழில்நுட்ப இலாபங்களின் வழங்கலை வடிவமைக்கிறது என்பதை விளக்கும் மூன்று கருத்துரைகள் சமர்பிக்கப்பட்டுள்ளன.

1. பெண்கள் புதிய பொருளாதார வாய்ப்புகளை பெற முடியும். ஆனால், தொழிலாளர் பால்நிலை சார்ந்த பிரிவு தொடர்ந்து நீடிக்கும். தளப் பொருளாதாரமானது, பெண்களுக்கு இடம்பெயர்வு மற்றும் கலாச்சார தடைகளை சமாளிக்கவும், சமனான கொடுப்பனவு வாய்ப்புகளை நோக்கி நகரவும் அனுமதிப்பதுடன், வேலை அணுகல் மற்றும் ஈடுபாடு ஆகியவற்றில் அதிகப்படியான தடைகள் வளர்ந்துவரும் தொழில்நுட்பங்கள் மூலமாக இன்னமும் அடையாளப்படுத்தப்படாமல் இருக்கின்றன. டிஜிட்டல் பொருளாதாரத்தின் ஊழியர் நிலைமைகள் மூலம் அதன் ஊழியர்களுக்கு அதே பாதுகாப்பான சேவைகள் வழங்கப்படாமல் இருக்கலாம். அதில் பெரும்பாலானவர்கள் பெண்களாக இருப்பதுடன், குடும்ப வாழ்க்கையின் சுமையை தொடர்பவர்களாக இருப்பர்.

2. தற்போதைய பிராந்திய வேறுபாடுகள் மீள கட்டமைக்கப்படலாம், அதிகமாகலாம் மற்றும் தொழில்நுட்ப பின்பற்றலுடன் மிகவும் மோசமடையலாம். நகர்ப்புறப் பிரதேசத்திலுள்ள கல்வி முதலீடு, உட்கட்டமைப்பு வசதி மற்றும் பொருளாதாரம் என்பவற்றில் காணப்படும் சமமற்ற தனமை, குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நீண்டகாலம் இடம்பெற்ற மோதல்கள் மற்றும் ஓரங்கட்டுதல் போன்றவற்றால் மொழித்திறன், டிஜிட்டல் திறன்கள் மற்றும் கண்ணியமான வேலைகள் மற்றும் வேலைவாய்ப்பு அணுகல் ஆகியவற்றில் ஏற்றத்தாழ்வுகளை உருவாக்கியுள்ளன. இந்த நிலைமைகள், நாடு முழுவதும் தொழில்நுட்ப இலாபங்களின் வழங்கலை வடிவமைப்பதாக அமையலாம். டிஜிட்டல் பொருளதாரத்திற்கான சமனற்ற அணுகல் காரணமாக தற்போதுள்ள பிராந்திய வேறுபாடுகள் மீள் உற்பத்தி செய்யப்படும்.

3. திறன் சார்ந்த இடைவெளிகள் மற்றும் மொழித்தடைகள் ஆகியன தொழிலாளர்களுக்கு நன்மதிப்புள்ள வேலை மற்றும் தொழில்நுட்ப ஆதாயங்களை அணுகுவதில் சவால்களை ஏற்படுத்தலாம். இலங்கையானது எதிர்கால தொழில் உலகுக்கு தம்மை தயார்படுத்தி வருவதன் காரணமாக கல்வி மற்றும் திறன்களிலுள்ள தற்போதைய இடைவெளிகள் முக்கிய சவால்களில் ஒன்றாக காணப்படுகிறது. இலங்கையில் பெரும்பாலான இளைஞர்கள் உயர் கல்வியை பூர்த்தி செய்யாதவர்களாகவும், திறன் பயிற்சி, மென்திறன்கள், டிஜிட்டல் கல்வி மற்றும் ஆங்கில எழுத்தறிவினையும் கொண்டவர்களாகவில்லை. இது அவர்களது அபிலாஷைகளுக்கு பொருத்தமான உயர் திறனுள்ள தொழில்களை அணுகுவதற்கான வாய்ப்பினை கட்டுப்படுத்துகிறது. மாறாக, படித்த மற்றும் படிக்காத சமனாக குறைந்த திறனுள்ள, கை வேலைகளில் ஈடுபட விருப்பமில்லாத, தேங்கி நிற்கும் இளைஞர்கள் விரைவாக உருவாகிவரும் தனியார் துறைகளுக்கு தகுதியற்றவர்களாகின்றனர்.

## முன்னோக்கிய பாதை

எதிர்காலத்தில் எதிர்கொள்ளும் தொழில்நுட்பம் அனைவருக்குமான முன்னேற்றம் மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றை நோக்கி வழிவகுக்காமையினால் தீர்மானமானக் கொள்கை அமைத்தல் மற்றும் செயற்பாடு அவசியமாகும். எனவே எதிர்காலப் பணி நியாயமானதாகவும், உள்ளார்ந்ததாகவும் அமையும் பொருட்டு, அதனை சீராக்குவதற்கான தலையீடு அவசியமாகவுள்ளது. எமது ஆய்வானது, மூன்று பிரகாசமான புள்ளிகள் மற்றும் பத்து கொள்கை வழிகள் ஊடாக முன்னோக்கிய பாதையை முன்மொழிகிறது. பிரகாசமான புள்ளிகள் என்பது இலகுவாக தன்னியக்கமில்லாததாகவும் அல்லது

தொழில் உருவாக்கத்திற்கான புதிய வழிகளை ஏற்படுத்தும் தொழில்நுட்ப புதுமையாகவும் உள்ள துறைகளாக காணப்படுகிறது. கொள்கை வழிகள் என்பது கண்ணியமான வேலையை ஏற்படுத்தும் மூலோபாயங்களின் பட்டியலை பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

## பிரகாசமான புள்ளிகள்

1. பராமரிப்பு பொருளாதாரமானது, கண்ணியமான தொழில் வாய்ப்புகளை வழங்கலாம் மற்றும் தன்னியக்கமானது குறைந்தளவில் பாதிப்படையக்கூடிய வாய்ப்புகளை கொண்டிருக்கும். மருத்துவ, முதியோர் மற்றும் குழந்தைகள் பராமரிப்பு துறைகளுக்கு செயற்திறனுள்ள தொழிலாளர்கள் தேவைப்படும் சேவை சார்ந்த தொழில்கள் முற்றிலும் தன்னியக்கமாக இயங்குவதற்கான சாத்தியமில்லை. சேவை வழங்குநர் மற்றும் பெறுநர் ஆகியோருக்கிடையிலான தனிப்பட்ட மற்றும் உணர்வுபூர்வமான எந்தவொரு தொழிலாளர் பிணைப்பும் எதிர்காலத்தில் மிகவும் மதிக்கப்படுவதாக அமையும். குறிப்பாக இது அதிகளவான வயது முதிர்ந்தோர் சனத்தொகையை கொண்டுள்ள இலங்கைக்கு பொருத்தமானதாகும்.

2. பேண்தகை உற்பத்தி, சேவைகளுக்கான கேள்வியானது புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கக்கூடும். வாடிக்கையாளர் விழிப்புணர்வானது, பேண்தகைமையான உற்பத்திகள் மற்றும் சேவைகளுக்கான கேள்விக்கு உந்துதலாக அமையும். பேண்தகைமை வாய்ப்புகளுக்கான வலுவான திறனானது விவசாயம், மீளுருவாக்க சக்தி, கழிவு முகாமைத்துவம் மற்றும் சுற்றுலா போன்ற துறைகளில் காணப்படுகிறது. பேண்தகைமையுள்ள தொழிலாளர் வாய்ப்புகளை நோக்கி நகர்வதன் மூலமாக பெண்களை தொழிற்படையில் பங்குபற்றச் செய்வதற்கான வழிகள் திறக்கப்படும்.

3. சுற்றுலாத்துறையில் வேலைவாய்ப்புகள் வளர்ச்சியடையும். டிஜிட்டல் தளங்களுக்கான தனிப்பட்ட சேவை வழங்குநர்களின் அணுகல் மூலமாக இயக்கப்படும். வீடமைப்பு, போக்குவரத்து, உணவகங்கள் போன்ற தொழிற்துறைகளைச் சார்ந்த நேரடியான மற்றும் மறைமுகமான வேலைவாய்ப்புகளை உருவாக்கக்கூடிய டிஜிட்டல் தளங்கள் ஊடான சுற்றுலாத்துறை அடிப்படையிலான சுய வேலைவாய்ப்பு தொகுப்பாக அமையும். இலங்கை முழுவதும் பரந்தளவிலான வாய்ப்புகளை வழங்குவதோடு, டிஜிட்டல் தளங்களானது, முறையான ஹோட்டல் துறைக்கு வெளியே சிறியளவிலான மற்றும் முறையற்ற நிறுவனங்களை இயலச்செய்து சுற்றுலா துறையில் தொழில் அணுகல் பரவலாக்கத்தில் டிஜிட்டல் தளங்கள் முக்கிய பங்கு வகிக்கிறது

கண்ணியமான தொழிலுக்கான நான்கு கொள்கை இலாகாக்கள்: மேலதிக ஆய்வுகள் மற்றும் கண்டறிதல்களுக்கான மூலோபாயங்கள்

## 1. கல்வி மற்றும் திறனூட்டல்

அ. டிஜிட்டல் திறன் நிகழ்ச்சிகளை ஊக்குவித்தல் மற்றும் அடிப்படை திறன்களை வலிமைப்படுத்தல்
ஆ. பிராந்திய இடைவெளிகளை அடையாளப்படுத்துவதற்கு கல்வி மற்றும் திறனாக்கல் திட்டங்களை வளர்த்தல்
இ. தரவு அறிவியல் மற்றும் சைபர் பாதுகாப்பு வேலைகளுக்கான முயற்சிகள் மீது கவனம் செலுத்தல்

## 2. தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம்

அ. தரவுக் கட்டுப்பாட்டு திட்டத்தை நடைமுறைப்படுத்தல்
ஆ. குறிக்கோள் அடிப்படையிலமைந்த புதுமைகளுக்கு ஆதரவளித்தல்
இ. தொழில்நுட்ப பின்பற்றல் மற்றும் தொழில் முயற்சியாண்மையை தூண்டுதல் போன்றவற்றை ஊக்குவித்தல்

## 3. தொழிலாளர் பாதுகாப்பு

அ. தொழிலாளர் பாதுகாப்பு திட்டங்களை திருத்தியமைத்தல்
ஆ. களத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தை முறைப்படுத்தல்

## 4. மீள் விநியோகம்

அ. சமூக பாதுகாப்பு ஏற்பாடுகளை வலுப்படுத்தல்
ஆ. தொழில்நுட்ப இலாபங்களின் மீள் விநியோகிப்பு

# நான்கு கொள்கை இலாகாக்கள்

அடுத்துவரும் தசாப்தத்தில் சந்தேகத்துக்கிடமின்றி பொருளாதாரத்தின் பல்வேறு பிரிவுகளில் தொழில்நுட்பமயமாக்கல் இலங்கை வளர்ச்சியின் மூலோபாயமாக விளங்கும். ஏனைய நாடுகளை விட இலங்கையின் தனித்துவமான சமூக பொருளாதார சூழலினுள் தொழில்நுட்பத்தின் வேகம் மற்றும் தீவிரம் வேறுபட்டிருப்பினும், உலகளவில் காணப்படும் பரந்துபட்ட தொழில்நுட்ப மாற்றங்களுக்கான எதிர்ப்பாற்றலை இலங்கைத் தொழிற்படை கொண்டிருக்காது. அண்மைய கொள்கை நிலைப்பாடுகள் ஆகியன உயர் மதிப்புள்ள ஏற்றுமதி சார்ந்த உற்பத்தி மற்றும் சேவைகள், நேரடி வெளிநாட்டு முதலீடு மற்றும் புதுமை, முயற்சியாண்மை மற்றும் டிஜிட்டல் பொருளாதாரத்தை தேசிய மட்டத்தில் ஊக்குவித்தல் மற்றும் மூலோபாய மட்டம் ஆகியவற்றை ஈர்ப்பது மீது விசேடமாக கவனம் செலுத்துகிறது. சலுகை கடன் திட்டங்கள் மற்றும் பொருத்தமான மானிய திட்டங்கள் போன்ற கொள்கை முயற்சிகள் ஆகியன நிறுவன மேம்படுத்தல், தொழில்நுட்ப பின்பற்றல் மற்றும் உற்பத்தி மற்றும் செயல்முறைகளை விருத்தி செய்தல் போன்றவற்றுக்கு பயன்படுத்தப்பட்டன. இந்த அனைத்து இயக்கவியல்களும் இற்றை விட அடுத்துவரும் இரு தசாப்தங்களில் மிகவும் தொழில்நுட்பம் சார்ந்ததாக பொருளாதாரத்தை மாற்றியமைக்கும்.

நாட்டினுள் தொழில் உலகை மாற்றியமைப்பதற்கான கொள்கைகள் மற்றும் மூலோபாயங்களை உள்ளடங்கிய தொகுப்புக்கான தேவை இலங்கைக்கு இன்னமும் நிலவுகிறது. கொள்கை வழிபாதைகள், நான்கு பகுதிகள் முழுவதும் இயங்குகின்றன. முதலாவது, தொழில்நுட்பம் மற்றும் புதுமை கொள்கைகள் ஆகியன புதிய துறைகளில் வேலைவாய்ப்பு தலைமுறையினர் கைவிடப்படல் மற்றும் முடக்கப்படும் அபாயத்தை கொண்டிருப்போருக்கு சேவையாற்றும் வகையில் பயன்பாடுகளை விருத்தி செய்யும் தொழில்நுட்ப பாதைகளை சீர் செய்வதற்கு பயன்படுத்தப்படுகிறது. இரண்டாவதாக, கல்வி மற்றும் திறன் கொள்கைகள் ஆகியன புதிய துறைகளில் வாய்ப்புகளை பெறுதல் மற்றும் முயற்சியாளர்களின் முயற்சிகளை நடைமுறைப்படுத்தல் ஆகயவற்றுக்கான வாழ்நாள் கற்றல் வாய்ப்புகள் மற்றும் திறன் கட்டியெழுப்பல் ஆகியவற்றுக்கு தேவைப்படுகின்றன. மூன்றாவதாக, மறுபங்கீட்டு கொள்கைகள் ஆகியன அரசாங்க கொள்கைகள் மற்றும் வலுவான உலகளாவிய பாதுகாப்பு வலைகள் மற்றும் நிறுவனங்களின் ஊழியர் இழப்பீட்டின் புதிய வடிவங்கள் ஊடாக தொழில்நுட்ப இலாபங்கள் சமூகத்தில் பரந்தளவில் விநியோகிக்கப்படுவது உறுதிப்படுத்தப்படுகிறது. இறுதியாக, ஊழியர் பாதுகாப்பு மூலோபாயங்கள் ஆகியன பணித்தளம் ஊடாக தொழில் உறவுகளை மாற்றியமைத்தல் மற்றும் ஒப்பந்த, சுய தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களின் அதிகரிப்பு காரணமாக தொழிலாளர்களை சிறப்பாக பாதுகாப்பதற்கான புதிய கட்டமைப்புகளை வழங்குகிறது. கீழே பட்டியலிடப்பட்டுள்ள வழிப்பாதைகள் எதிர்கால ஆய்வு மற்றும் கண்டுபிடிப்புகளுக்கான குறிக்கோள் பட்டியலை குறிப்பதுடன், ஒவ்வொன்றும் தமது தனித்த சவால்கள் மற்றும் வர்த்தக பரிமாற்றல்களை தோற்றுவிக்க வேண்டும் என அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

## 1. கல்வி மற்றும் திறனூட்டல்

### டிஜிட்டல் திறன் நிகழ்ச்சிகளை ஊக்குவித்தல் மற்றும் அடிப்படை திறன்களை வலிமைப்படுத்தல்

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (2018) கணிப்பின் பிரகாரம் விரைவான தொழில்நுட்ப மாற்றம் உருவாக்கும் திறன்கள் மற்றும் கல்வி தேவைப்பாடுகளிலுள்ள பாரதூரமான இடைவெளிகளை சமாளிப்பதே சாதாரண வேலையின் அடிப்படை சவால்களில் ஒன்றாகவுள்ளது. மேலும் மாறிவரும் தொழில் உலகை சமாளிப்பதற்கு பாரம்பரிய கல்வி மற்றும் பயிற்சி முறைமைகளில் பாரியளவிலான சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். எதிர்கால டிஜிட்டல் பொருளாதாரத்தில் அடுத்துவரும் தசாப்தத்தில் இலங்கையின் இளைஞர்கள் தொழிற்படையில் உள்நுழைவதற்கான வாய்ப்பு ஏற்படவுள்ளது. டிஜிட்டல் திறன் தலையீடுகள் ஆகியன பணியாளர்கள் மத்தியில் பின்பற்றலை இயலச் செய்யும் தொழினுட்ப திறன்களுக்கு அப்பால் செல்ல வேண்டும், ஆனால் கல்விக்கு பதிலீடாக திறனாக்கல் அமையக் கூடாது. பிரச்சினை தீர்த்தலுக்கான அடிப்படை அறிவானது, வாழ்நாள் கற்றல்

மற்றும் இலங்கையின் வயது முதிர்ந்த தொழிற்படையின் திறன் பின்பற்றல் ஆகியவற்றின் தொகுப்பாக அமையப் பெற வேண்டும். வாசிப்பு, எழுதுதல் மற்றும் எண்கணிதம் ஆகியவற்றின் முறையான

அடித்தளமின்றி அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் ஆகியவற்றின் எதிர்கால உயர்மட்ட விரிவாக்கம், குறியீட்டு மற்றும் டிஜிட்டல் திறன்கள் ஆகியன சாத்தியமில்லை. எனவே தொடர்ச்சியாக மென்திறன்கள் அவசியமாகும்.

**பிராந்திய இடைவெளிகளை அடையாளப்படுத்துவதற்கு கல்வி மற்றும் திறனாக்கல் திட்டங்களை வளர்த்தல்**

இலங்கையில் இன மற்றும் மொழியின் அடிப்படையில் கல்வி மற்றும் திறன்கள் அடைதலில் பல்வேறுபட்ட பிரதேச வேறுபாடுகள் காணப்படுகின்றன. கல்வி மற்றும் திறன் இடைவெளிகளை அடையாளப்படுத்தும் நோக்கில் பிரதேசங்களில் குறிப்பாக பெண்கள் மற்றும் ஏனைய விளிம்பு நிலை குழுக்கள் மத்தியில் இலக்கு வைக்கப்படும் கொள்கை அளவுகோல்கள் அவசியாகவுள்ளன.

ஆங்கில மொழித்திறன் மற்றும் டிஜிட்டல் எழுத்தறிவு ஆகியவற்றிலுள்ள பிராந்திய வேறுபாடுகளை சமாளிப்பதற்கு சமூகக் கவனம் தேவையாகவுள்ளது. உள்நாட்டு மொழிகளில் டிஜிட்டல் தளங்களை அணுகல் மற்றும் கணிசமான கிராமப்புற இடைவெளிகளை கருதுகையில் ஆங்கில மொழித்திறனை மேம்படுத்தல் ஆகியவற்றை முன்னெடுப்பதற்கான முயற்சி தேவையாகவுள்ளது. இதனையொத்ததாக, கிராமப்புற மாவட்டங்களிலுள் ஆசிரியர்களுக்கு டிஜிட்டல் தொழில்நுட்பங்களை கற்பித்தல் சாதனமாக பயன்படுத்துவதற்கான பயிற்சிகளை வழங்குவதற்கான தேவை இலங்கைக்கு உள்ளது. கல்வித்துறை முழுவதும் டிஜிட்டல் எழுத்தறிவின் தேசிய மட்ட பின்பற்றல் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக இது அமைதல் வேண்டும். இதனை துரிதப்படுத்துவதற்கு, சர்வதேச நிறுவனங்களுடனான பங்காண்மை பயன்மிக்கதாக அமையும். இதற்கு அண்மைய முயற்சிகளான CISCO மற்றும் மைக்ரோசொப்ட் சேவையுடனான “சர்வோதய இணைவானது” (இலங்கை தொழில்நுட்பம் - NGO உள்ளார்ந்தம்) மிகச்சிறந்த உதாரணங்களாக உள்ளன. மேலும் குடும்ப ஆலோசனைகளை ஊக்குவிக்கும் தேசிய பிரச்சாரங்கள் ஆகியன பொருளாதாரத்தை சுற்றியுள்ள தற்போதுள்ள சமூக கலாச்சார நெறிகளை எதிர்கொள்ள உதவியாக அமையும். இதனூடாக, பாரம்பரிய நிலையங்களை அணுக முடியாத பெண்கள் மற்றும் ஏனைய விளிம்பு நிலை குழுக்களுக்கான கற்றல் வசதிகளும் உருவாக்கப்படும்.

**தரவு அறிவியல் மற்றும் சைபர் பாதுகாப்பு வேலைகளுக்கான முயற்சிகள் மீது கவனம் செலுத்தல்**

உலகளாவிய பொருளாதாரத்தில் போட்டியாளராக திகழ்வதற்கு நிபுணர்கள் மற்றும் தொழினுட்ப பட்டதாரிகள் ஆகியோர் மிகவும் மேம்படுத்தப்பட்ட தகவல் தொழில்நுட்ப வேலைகளின் விருத்தியுடன் பின்பற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. தகவல் தொழில்நுட்ப துறையின் வழக்கமான வேலைகள் தன்னியக்கத்திற்கு முகங்கொடுப்பது அதிகரித்து வருவதனால் கல்வி மற்றும் பயிற்சி ஆகியன இலங்கையின் விரைவாக உருவாகும் நிலத்தோற்றத்திற்கு பொருத்தமானதாக அமைதல் வேண்டும். குறித்த நடவடிக்கைகள் இந்தியாவில் எடுக்கப்பட்டுள்ளன. உதாரணம்: தொழினுட்ப கல்விக்கான அனைத்திந்திய சபையானது (AICTE) செயற்கை அறிவியல், இயந்திர கற்றல், ரொபொடிக்ஸ், தரவு Crunching மற்றும் பகுப்பாய்வு முதல் பாடத்திட்டம் வரை என உள்ளடக்கப்பட்டு தொழினுட்ப கற்கைநெறிகள் சீரமைக்கப்பட்டன. எதிர்பார்த்த பாடத்திட்ட சீர்திருத்தம் மற்றும் வாழ்நாள் கற்றல் மற்றும் தொழிற்பயிற்சி ஆகியவற்றில் எவ்வாறு சிறந்த கவனத்தை செலுத்தல் என்ற ‘தன்னியக்க ஆயத்தச் சுட்டெண்’ ஆகியவற்றில் முதன்மையாக விளங்கும் தென் கொரியா, ஜேர்மனி, சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் போன்ற நாடுகள் மீது இலங்கை கவனம் செலுத்த வேண்டும்.

## 2. தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம்

### தரவுக் கட்டுப்பாட்டு திட்டத்தை நடைமுறைப்படுத்தல்

டிஜிட்டல் உட்கட்டுமானத்தை வசதிப்படுத்தும் வகையில் தரவு சேகரிப்பு, களஞ்சியம், பகிரல் மற்றும் உரிமைத்துவம் ஆகியன செயற்திறனுடன் நிர்வாகிக்கப்படல் வேண்டும். இலங்கையின் டிஜிட்டல் வாடிக்கையாளர்கள் மற்றும் பாதுகாப்பு விதிமுறைகள் ஆகியவற்றிலுள்ள கணிசமான இடைவெளிகளை பங்கு உரிமைதாரர்கள் அடையாளப்படுத்தியுள்ளனர். தரவுகளை நிர்வகிப்பதற்கான சட்டங்கள் இலங்கையில் தற்போது எதுவுமில்லை. ஆனால், நடைமுறையின் தரவு பாதுகாப்பு குறியீட்டின் பின்பற்றலை அடிப்படையாக கொண்ட தரவு நிர்வாக கொள்கையை அடைவதற்கான முயற்சிகளை தகவல் தொடர்பாடல் முகவரமைப்பு மேற்கொண்டு வருவதுடன், இது தற்போதுள்ள 2003 ஆம் ஆண்டுக்கான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சட்டத்தின் கீழ் விதிமுறையாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இதற்கமைய, உலகளாவிய போக்குகள் மற்றும் சிறந்த நடைமுறைகளை பேணுவதோடு டிஜிட்டல் பொருளாதாரத்தை இயலச் செய்யும் வகையில் சமகால தரவு தனியுரிமை மற்றும் பகிரல் சட்டங்கள் ஆகியவற்றை இலங்கை விருத்தி செய்தல் வேண்டும். ஐரோப்பிய ஒன்றியத்தின் ‘பொது தரவு பாதுகாப்பு விதிமுறைகள்’ ஆனது ஒரு நாடானது தரவு பாதுகாப்பு கட்டமைப்பினை கொண்டிருக்காத சந்தர்ப்பத்தில் விதிமுறைகளை விதித்தல் மற்றும் தனிப்பட்ட தரவின் எல்லை தாண்டிய பாய்ச்சல்களை கண்காணித்தல் போன்ற செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறது.

### குறிக்கோள் அடிப்படையிலமைந்த புதுமைகளுக்கு ஆதரவளித்தல்

இலங்கையின் நிறுவனங்கள் முகங்கொடுக்கும் சவால்களுக்கான தீர்வினை கட்டியெழுப்புவதற்கு ஆதரவாக பொதுக்கொள்கைகளை குறிக்கோள் அடிப்படையிலமைந்த புதுமைகள் பயன்படுத்தலாம். இலங்கையானது அனுமதிகள், புதுமையான கூப்பன்கள் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மானியங்கள் ஊடாக வர்த்தக ரீதியான தீர்வுகள் மற்றும் வேலைவாய்ப்புகளை அபிவிருத்தி செய்யும் தொழில்நுட்ப நிறவனங்களை இலங்கையானது ஊக்குவிக்கவும், வலுப்படுத்தவும் முடியும். உதாரணத்திற்கு, அரசாங்கமானது பசுமை தொழில்நுட்ப துறைகளில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திகளுக்கும், நிறுவன மற்றும் வீட்டு மட்டத்திலான தூய்மை தொழில்நட்ப பின்பற்றல் ஆகியவற்றுக்கு ஆதரவளிக்க முடியும். உதாரணம்: சூரியசக்தி நிறுவலுக்கான சலுகைக் கடன்கள், வீட்டு வசதிக்கான மானியங்கள் ஆகியவையாகும். இது பசுமை தொழிற்துறைகளில் ஒட்டுமொத்த புதிய பொருளாதார நடவடிக்கையை இயக்குவதுடன், புதிய தொழில்கள் மற்றும் வேலைகளுக்கான தேவை அதிகரிக்கும்.

அதேபோன்று, அரசினது வீடுகள் மற்றும் தொழிற்துறைகளின் கூரை மீது சூரியசக்தியை ஊக்குவிப்பதன் மூலம் இலங்கையில் சூரியசக்தி கல உற்பத்தி மற்றும் நிறுவலின் புதிய துறை உருவாகுவதுடன், அது இளைஞர்களுக்கான புதிய தொழினுட்ப வேலை வாய்ப்புகளையும் வழங்கும். ‘இலங்கையிலுள்ள சூரியசக்தி கல நிறுவல் நிறுவனங்கள்’ என ஒன்லைனில் தேடிய போது கொழும்பு புறநகர் பகுதியில் மாத்திரம் 20 நிறுவனங்கள் காணப்படுவதாக தெரிய வந்தது. காலநிலை மாற்றத்தின் பின்பற்றல், சுகாதார பராமரிப்பு, விவசாயம், வயது முதிர்ந்தோர் சனத்தொகை போன்ற துறைகளிலுள்ள ‘பாரிய சவால்கள்’ அத்துறைகளின் மேம்படுத்தும் நோக்கில் தொழில்முனைவோரை ஊக்குவிக்க முடியும்.

### தொழில்நுட்ப பின்பற்றல் மற்றும் தொழில் முயற்சியாண்மையை தூண்டுதல் போன்றவற்றை ஊக்குவித்தல்

தொழில்நுட்ப பின்பற்றல் மற்றும் தன்னியக்கம் ஆகியன தொழிலாளர் சார்ந்ததும், இளைஞர்களை கவராத ஏனைய துறைகள் (உதாரணம்: விவசாயம், பெருந்தோட்டத்துறை) தொழிலாளர் பற்றாக்குறை, போட்டித்தன்மை இழப்பு ஆகியவற்றை அடையாளப்படுத்தி இடம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கான புதிய வாய்ப்பகளை இயக்குவதற்காக உதவலாம்.

தனியார் துறையில் புதிய தொழில்நுட்பங்களையும், நிறுவன புதுமை, தொழில்நுட்ப இறக்குமதிக்கான எல்லை வரியை குறைத்தல், டிஜிட்டல் கொடுப்பனவுகளை தாராளமயமாக்கல் மற்றும் ஒருங்கிணைவை ஊக்குவித்தல் போன்ற பரந்துபட்ட பயன்பாடுகளை ஊக்குவித்தல் ஆகியவற்றை அரசாங்கம் ஊக்குவிக்க வேண்டும். மேலும், தொழிலாளர்கள், முயற்சியாளர்கள், விவசாயிகள் ஆகியோருக்கான தகவல் மற்றும் சந்தை தளங்கள் ஆகியவற்றை ஊக்குவிப்பதன் மூலம் தொழினுட்ப பின்பற்றல் மற்றும் முயற்சியாண்மையின் புதிய வடிவங்கள் ஊக்குவிக்கப்படும். தற்போது தேசிய மட்டத்தில் செயற்கை அறிவியல் குறித்து வரையறுக்கப்பட்ட விவாதம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. ஆனால், இவ்விடயம் தொடர்பில் தகவல் தொழில்நுட்ப துறை ஒருசில முயற்சிகளை முன்னெடுத்துள்ளது. கடந்த வருடம் தகவல் தொழில்நுட்பத் துறை நிறுவனமான SLASSCOM ஆனது, முதலாவது தேசிய செயற்கை அறிவியல் மாநாடான 'AI ஆசிய உச்சி மாநாடு 2018' இனை முன்னெடுத்தது. மேலும், கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணினி பீடத்தில் தரவு அறிவியல் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் புதிதாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

## 3. தொழிலாளர் பாதுகாப்பு

**தொழிலாளர் பாதுகாப்பு திட்டங்களை திருத்தியமைத்தல்**

தொழில்நுட்ப அபிவிருத்திகள் புதிய வர்த்தக மாதிரிகளை நோக்கி வழிநடத்துவதாக அமையும். உதாரணமாக: தொழிலாளர் பாதுகாப்பு மற்றும் பணி நிலைமைகளை திருத்தியமைப்பதற்கு தேவையான தரமற்ற பணி வடிவங்கள். இதற்கு மேலதிகமாக, டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் என்பன தகவல் பகிரல், குறை தீர்த்தல் மற்றும் கூட்டு பேரம் பேசலுக்கான புதிய வழிமுறைகள் ஆகியவற்றுக்கான மெய்நிகர் வெளியை (Virtual space) பணியாளர்களுக்கு அளிக்கிறது. அத்தோடு, இலங்கையில் ஒழுங்கமைக்கப்படாத மற்றும் முறையற்ற துறையை ஒழுங்குப்படுத்துவதில் வாய்ப்புகளை வழங்குவதற்கான அனுமதியை களத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்திற்கு வழங்குகிறது.

கூட்டு பேரம் பேசலை ஊக்குவிப்பதற்கான வழிகள் மற்றும் சேகரிக்கும் புதிய வடிவங்கள் ஆகியன சமூக ஊடகங்கள் ஊடாக குறிப்பாக இடவமைவினை அடிப்படையாகக் கொண்ட ஓட்டுநர்கள் போன்ற குழுக்களுக்கு சாத்தியமாகியுள்ளது. இதைத்தவிர, குறித்த தொழில்நுட்பம் மற்றும் எதிர்கால பணி தொடர்பாக தொழில் தருநர் நிறுவனங்கள் மற்றும் சங்கங்கள் ஆகியவற்றுக்காக திறன் கட்டியெழுப்பலுக்கான தேவையும் காணப்படுகிறது.

**களத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தை முறைப்படுத்தல்**

இலங்கையில் களத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரம் வளர்ச்சியடைவதோடு வேலைவாய்ப்புகள் குறிப்பாக முறையற்ற வேலைகளும் வளர்ச்சியடையும். அத்தோடு நகர்ப்புறங்களில் கல்விகற்ற இளைஞர்களுக்கான சமூக இயக்கம் சார்ந்த புதிய விடயங்களும் வளர்ச்சியடையும். இது பதிவு செய்தல் மற்றும் முறையான வங்கியியல் பயன்பாடு ஊடாக களப் பணியாளர்களுக்கான நடைமுறைகளை வசதிப்படுத்தும். இருந்தபோதிலும், இக்களங்களானது பாரம்பரிய முதலாளி-தொழிலாளி உறவை சீர்குலைப்பதுடன், பணியாளர்களின் உரிமைகளையும் அகற்றுவதற்கு வழிவகுக்கும். இந்த வழிவகைகளில், தொழிலாளர் நலன்புரி மீது புதிய, கூட்டிணைந்த கள மாதிரிகளை ஆய்வு செய்தல் ஆகியவற்றுடன் கள அடிப்படையிலமைந்த பொருளாதாரத்தின் நிலையான மற்றும் பிரதிபலிப்பு கட்டுப்பாடு என்பது கட்டாயமானதாகும்.

Pickme மற்றும் Uber போன்ற பிரயாண பகிர்வு தளங்கள் மற்றும் அரச விகிதங்கள் மற்றும் வழிகாட்டல்கள் ஆகியவற்றுக்கான உரிமத்தை அமுல்படுத்துவதற்கான 1988 ஆம் ஆண்டின் மோட்டார் வாகன சட்டத்தில் 93 ஆம் பிரிவில் சீர்திருத்தத்தை முன்மொழிந்த இந்தியாவின் மோட்டார் வாகனச்

சட்டத்தில் இத்தகைய முயற்சிகளைக் காணலாம். பொது நலமாக கருதக்கூடிய வகையில் பெறுமதியை உருவாக்கும் பணியாளர்கள் மற்றும் அரசுக்கு சொந்தமான தளங்கள் ஆகியவற்றுக்கான கூட்டுறவு மாதிரிகளுக்கான பிற உதாரணங்களாக Loconomics மற்றும் Stocksy (சுய நிபுணர்கள் மற்றும் தனிப்பட்ட அனுமதி பெறல்) ஆகியன காணப்படுகின்றன.

உள்நாட்டு சட்டங்களுக்கிணையாக இடவமைவினை அடிப்படையாகக் கொண்ட தளங்கள் (பிரயாண பகிர்வு, உணவு விநியோகச் சேவைகள் மற்றும் இலத்திரனியல் வர்த்தகம் ஆகியவை), தொழில் தருநரின் இடவமைவினை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச நடைமுறைகளை பின்பற்றும் வலைத்தள அடிப்படையிலமைந்த தளங்கள் (தொலைவு வெளிவாரி பணி) ஆகியவற்றை தனித்தனியாக கவனம் செலுத்த வேண்டியமை மிக முக்கியமாகும். வலைத்தள அடிப்படையிலமைந்த தளங்களை நிர்வாகிப்பதற்காகவும், பரிமாற்றல் கொள்கையை ஸ்தாபிப்பதற்கும் உலகளாவிய முயற்சிகளை இலங்கை பின்பற்ற வேண்டும்.

## 4. மீள் விநியோகம்

**சமூக பாதுகாப்பு ஏற்பாடுகளை வலுப்படுத்தல்**

கள அடிப்படையிலான பொருளாதாரமானது புதிய தொழில் உறவுகளை ஏற்படுத்துவதோடு, வழக்கமான பணியானது சுய வேலைவாய்ப்பு மற்றும் ஒப்பந்த பணியின் புதிய வடிவங்கள் மூலமாக பதிலீடு செய்யப்படும். சமூக பாதுகாப்பு கொள்கைகள் - சுகாதார பராமரிப்பு, ஓய்வூதியம், வேலைவாய்ப்பின்மை காப்புறுதி மற்றும் குழந்தை பிறப்பு விடுமுறை ஆகியவற்றுக்கான அணுகல் - ஆகவே சூழலை மாற்றியமைப்பதற்கு பின்பற்றப்பட வேண்டும். தொழில் உலகு தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டு வருவதால் சமூக பாதுகாப்பு தளமொன்றை நாடுகள் முன்னெடுக்க வேண்டும் என சர்வதேச தொழிலாளர் அமைப்பு முன்மொழிந்துள்ளது.

இலங்கையில் குறைந்தபட்ச தேசிய வேதனம் அல்லது உலகளாவிய வேலைவாய்ப்பின்மை காப்புறுதி ஆகியவற்றை கொண்டில்லை. தொழில்நுட்ப கோளாறுகளின் போது வேலை இல்லாமலோ அல்லது வேலையொன்றை தேடும் போதோ தொழிலாளர்களுக்கு தற்காலிகமாக ஆதரவளிக்கக்கூடிய வகையில் வேலையின்மை நிதியம் ஒன்று குறித்து சம்பத்தப்பட்ட தரப்பினர் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். பகுதி நேர, நிலையான தவணை மற்றும் முகவராண்மை தொழிலாளர்களுக்கான நிதிசார் ஏற்பாடுகளுக்கு பதிலாக கள அடிப்படையிலான பொருளாதார பணியாட்களுக்கு விசேட பாதுகாப்பினை ஐரோப்பிய ஒன்றிய கொள்கைகள் மூலம் வழங்கப்படுவதை காணக்கூடியதாகவுள்ளது.

முறையற்ற துறை மற்றம் விவசாயம், சமூக பாதுகாப்பு திட்டங்கள் ஆகியவற்றுக்கான பணப் பரிமாற்றல் மற்றும் பணி உத்தரவாதம் ஊடாக அடிப்படை வருவாய் பாதுகாப்பினை உறுதிப்படுத்த முடியும். மாதிரி மதிப்பீட்டுக்கான தென்னாபிரிக்காவில் இயற்றப்பட்ட இந்தியாவின் மகாத்மா காந்தி தேசிய கிராமிய ஊழியர் உத்தரவாதம் மற்றும் ஏனைய நிகழ்ச்சித்திட்டங்கள் மீது இலங்கை கவனம் செலுத்தலாம்.

**தொழில்நுட்ப இலாபங்களின் மீள் விநியோகிப்பு**

தொழில்நுட்பம் நோக்கிய வளர்ச்சியின் அனுகூலங்களானது, சில்லறை, கணக்கியல் போன்ற மத்திய மட்ட வேலைகளில் தாக்கம் செலுத்தி தொழிலாளியை விட மூலதனமே அதிகம் பெறப்படும். இது பாரம்பரிய மற்றும் மீள்விநியோக அளவுகோல்கள் ஊடாக அடையாளப்படுத்தப்பட வேண்டும். இலங்கை பெறக்கூடிய தொழில்நுட்ப இலாபங்களின் மீள்விநியோகம் குறித்து பல்வேறு உலகளாவிய கலந்துரையாடல்கள் இடம்பெறுகின்றன. உதாரணத்திற்கு, 'ரோபோக்கள் வரி', இது தற்போதைய விவாதங்களிலிருந்து மிகத் தொலைவில் இல்லை.

தொழில்நுட்ப ஜாம்பவானான பில்கேட்ஸ் 'இலத்திரனியல் நபர்கள்' ஆன ரோபோக்களை அடையாளப்படுத்தி இத்தகைய வரியை முன்மொழிந்தார். ஆனால் ஐரோப்பிய ஒன்றியமானது தொழிலாளர்கள் மீது வரியை விதிப்பதே சிறந்தது எனக்கூறி, ரோபோக்கள் மீதான வரி விதிப்பு கொள்கையை நிராகரித்தது. ஐரோப்பிய ஒன்றியத்தின் பாராளுமன்றத்தில் வரைபு இயக்கத்தின் மூலம் வரி முன்மொழிவுகளுக்காக நிறுவனங்கள் ரோபாடிக்ஸை பயன்படுத்தி சமூக பாதுகாப்பு பங்குபற்றல்களில் சேமிப்பினை பிரகடனம் செய்ய வேண்டும் என வாதிட்டது.

இந்தியாவின் NITI Aayog இன் உப தலைவர் நிறுவனங்களுக்கு தொழிலாளர் சலுகைகளை வழங்குவதன் ஊடாக திறன்கள் மற்றும் வாடமைக்கமர்த்தும் நடைமுறைகளை "தொழிலாளர் பயன்பாட்டு நிதியம் ஊக்குவிக்கும் என மற்றுமொரு திட்டத்தை முன்மொழிந்தார். மேலும் தொழிலாளர்களை பணிநீக்கம் செய்வதற்கான நிதி ரீதியான பொறுப்பினை கொண்டிருப்பதுடன், நாட்டின் வேலையின்மை மற்றும் சமூக பாதுகாப்பு நிதியத்திற்கு பங்களிப்பு வழங்கக்கூடிய வகையில் நிறுவனங்களில் ஒரு கட்டமைப்பினை பிரான்ஸ் அறிமுகம் செய்தது.

வேலையற்ற தொழிலாளர்களை வேலைக்கமர்த்தல் மற்றும் வேலைகளை உருவாக்குவதற்காக ஊழியர்களை மேலும் ஊக்குவிப்பதற்காக மானியம் அளிக்கப்படும் வேலைவாய்ப்பு மற்றும் கடன் வழங்கும் முறை ஆகியவற்றை பயன்படுத்தலாம். அதனையொத்ததாக, 'ஊழியர் உடைமை நிதியங்கள்' போன்ற நிறுவன உடைமைகளில் புதிய அபிவிருத்திகளை மேற்கொள்வதற்காக பரந்தளவிலான மற்றும் ஊழியர் கையிருப்பு தெரிவு திட்டங்களின் உள்ளார்ந்த பகுதிகள் மூலம் மீள்விநியோக கட்டமைப்புகளை உருவாக்க முடியும்.

தொழில் பாதுகாப்பு என்பது மிகவும் கடினமாக மாறியுள்ளமையினால் தொழிலாளர்களை பாதுகாக்கும் நோக்கில் எதிர்காலப் பணிகள் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பில் கொள்கை கலந்துரையாடல்களில் உலகளாவிய அடிப்படை வருவாயின் கருத்தாக்கம் விவாதிக்கப்பட்டது. சந்தை சக்திகளுக்கு மட்டும், தொழில்நுட்ப போக்குகள் அனைவருக்கும் கண்ணியமான வேலையை வழங்குவதற்கான சாத்தியமில்லை. மாறாக, ஏற்கனவேயுள்ள தொழிலாளர் சந்தை சமத்துவமின்மையை அவர்கள் அதிகரிப்பதற்கான அபாயம் நிலவுகிறது. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை வழிப்பாதைகளின் தொகுப்பானது, மேலதிக விசாரணை மற்றும் விவாதங்களுக்கான ஆரம்ப புள்ளியாக மாத்திரமே அமைந்துள்ளது. இலங்கையில் நியாயமான மற்றும் உள்ளார்ந்த விளைவுகளை நோக்கிய பணி மற்றும் தொழில்நுட்ப மூலோபாயங்கள் தேவையாகும்.

**Knowledge Partner**

TANDEM
RESEARCH

SOCIAL JUSTICE
DECENT WORK

ILO Country Office for Sri Lanka and the Maldives
202 - 204, Bauddhaloka Mawatha
Colombo 7,Sri Lanka
Tel : +94 11 259 2525 Fax : +94 11 250 0865
www.ilo.org/colombo